## மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின்

# மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சி!

## நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச.29-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சரஸ் மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சியைத் திறந்து வைத்து, தமிழ்நாட்டின் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் மளிகை பொருட்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் காணும் வகையில் "மதி" என்ற வணிக முத்திரையுடன் ஒரே மாதிரியான வண்ண உறையில் விற்பனை செய்திட அறிமுகப்படுத்தினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2024) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்ட இந்தியாவின் பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட சரஸ் மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சியைத் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் மளிகை பொருட்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் காணும் வகையில் "மதி" என்ற வணிக முத்திரையுடன் ஒரே மாதிரியான வண்ண உறையில் விற்பனை செய்திட அறிமுகப்படுத்தினார்.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறையானது கிராமப்புற கைவினைஞர்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து சரஸ் (SARAS Sale of Articles of Rural Artisans Society) எனப்படும் விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

சென்னை, நந்தனம், YMCA மைதானத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் நடைபெறும் சரஸ் மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனை கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள 110 அரங்குகளில் ஆந்திரா மாநிலத்தின் அழகிய மரச் சிற்பங்கள், தெலுங்கானா மாநிலத்தின் கலம்காரி பைகள், கேரள மாநிலத்தின் பாரம்பரிய உணவு வகைகள், கொண்டப்பள்ளி பொம்மைகள், குஜராத் மாநிலத்தின் கைத்தறி ஆடைகள், பீகார் மாநிலத்தின் மதுபாணி ஓவியங்கள், மகாராஷ்ட்ரா மாநில கோண்ட் பழங்குடியினரின் வண்ண ஓவியங்கள், மற்றும் சணல் பைகள், மேற்கு வங்காளத்தின் செயற்கை பூ கைவினைப் பொருட்கள், பாண்டிச்சேரி மாநிலத்தின் மூலிகைப் பொருட்கள் மற்றும் சிறுதானிய உணவுகள் உள்ளிட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், நாச்சியார்கோவில் குத்து விளக்குகள், கடலூர் முந்திரிப் பருப்பு, தருமபுரி சிறுதானிய தின்பண்டங்கள், ஈரோடு தரை விரிப்புகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கன்னியாகுமரி வாழைநார் பொருட்கள், நாமக்கல் கொல்லிமலை அரபுளி காபித் தூள், கரூர் கைத்தறி துண்டுகள், சிவகங்கை பாரம்பரிய அரிசி வகைகள், திருவண்ணாமலை ஜவ்வாது மலை தேன், சிறுதானியங்கள், தூத்துக்குடி பனை பொருட்கள், பனை வெல்லம் (கருப்பட்டி), விழுப்புரம் சுடுமண் சிற்பங்கள், அலங்கார விளக்கு திரைகள், விருதுநகர் செட்டிநாடு புடவைகள், அரியலூர் முந்திரி பருப்பு, கோயமுத்தூர் மூலிகை சோப்புகள், திண்டுக்கல் சின்னாளப்பட்டி சேலைகள், திருச்சி செயற்கை ஆபரணங்கள், மற்றும் திருநெல்வேலி அல்வா போன்ற பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியில் பாரம்பரிய சுவை மிகுந்த உணவுப் பொருட்கள் மற்றும் தமிழ்நாட்டின் கிராமிய சுவை நிறைந்த உணவுப் பொருட்களையும் விற்பனை செய்திட 10 அரங்குகள் உள்பட மொத்தம் 120 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

2024 டிசம்பர் 27-ஆம் தேதி முதல் 2025 ஜனவரி 09-ஆம் தேதி வரை நாள் தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் சரஸ் மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சியில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், இலவசமாக வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், சி.வி.எம்.பி.எழிலரசன், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி உள்பட அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2024) சென்னை நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் இந்தியாவின் பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்ட சரஸ் மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், சி.வி.எம்.பி. எழிலரசன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச.திவ்யதர்சினி உட்பட அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர் உடனிருந்தனர்.

## துணை முதல்வர் பிறந்தநாள்: 250 கலைஞர்கள் பங்கேற்பு!

# நெல்லை மத்திய மாவட்டத்தில் மாபெரும் கவியரங்க விழா!

## அமைச்சர் மு.பெ. சாமிநாதன் - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் வேண்டுகோள்!

*நெல்லை, டிச.29-*

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் கலைஞரும், திராவிட நல்திருநாடும் என்ற கருத்தியலில் 250 கவிஞர்கள் பங்கேற்கும் மாபெரும் சாதனை கவியரங்க விழா பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலை அருகில் உள்ள காது கேளாதோர் பள்ளியின் வளாகத்தில் இன்று 29ஆம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. இந்நிகழ்வில் செய்தித் துறை



அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஜெகத்ரட்சகன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

இந்நிகழ்வில் கலைமாமணி கழக செய்தித் தொடர்பு மாநிலத் தலைவர் ஆண்டாள் பிரிய தர்ஷினி, கவிஞர் பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வினை தமிழ்நாடு கலை இலக்கிய படைப்பாளர் கூட்டியக்கம் மற்றும் மத்திய மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சின்னத்துரை,மாவட்ட இலக்கிய அணி தலைவர் தங்க பாண்டியன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

ஆகவே நிகழ்வில் இந்நாள்,முன்னாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கி றார்கள்.

எனவே கழக மாநில,மாவட்,மாநகர,ஒன்றிய,பகுதி, பேரூர்,வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டக் கழக வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர்கள் வழக்கறிஞர் சுரேஷ்குமார் - வழக்கறிஞர் சுந்தரமூர்த்தி அறிக்கை!

*திண்டுக்கல்,டிச.29-*

வருகின்ற ஜனவரி மாதம் 18.1.2025 ஆம் தேதி சென்னையில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் மற்றும் தமிழக துணை முதல்வர் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. வழக்கறிஞர் மாநாடு சிறப்பாக நடைபெற இருப்பதால் அதில் கலந்து கொள்வது சம்பந்தமாக வருகிற 29. 12 2024 ஆம் தேதி திண்டுக்கல் கலைஞர் மாளிகையில் கழக துணை பொதுச்செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ,மேற்கு மாவட்டச் செயலாளர் உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் கிழக்கு மாவட்டச் செயலரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் ஐ.பி செந்தில் குமார் மற்றும் மாநில சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ அறிவுறுத்தலின்படி தென் மண்டல பொறுப்பாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளர் மற்றும் வழக்கறிஞர் தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி முன்னிலையில் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் திண்டுக்கல் கலைஞர் மாளிகையில் காலை 10 மணி அளவில் நடைபெறுவதால் கழக வழக்கறிஞர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கிழக்கு மாவட்ட அமைப்பாளர் கே சுரேஷ் குமார் மற்றும் மேற்கு மாவட்ட அமைப்பாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி மற்றும் துணை இயக்குநர் மாவட்ட சுகாதார பணிகள் சார்பில் "முத்தமிழறிஞர் கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம்பெருவினை அரசு மேல்நிலைப்பள்ளியில் வைத்து நடைபெற்றது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முகாமை துவக்கி வைத்தார். முகாமில் பொது மருத்துவம், சர்க்கரை நோய், இதய நோய், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை உட்பட பல்வேறு நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது. மேலும் முகாமில் 15 கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டது. முகாமில் நாகர்கோவில் மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் பா.செல்வகுமார், மாமன்ற உறுப்பினர் சூ.அமல செல்வன், மருத்துவர்கள் அஸ்வின் பிரதீப், மேரிலதா, மஞ்சு, மாநகராட்சி புள்ளியியல் உதவியாளர் சுப்பிரபா, பள்ளி தலைமை ஆசிரியர் துரை ராஜ், பகுதி செயலாளர் சேக்மீரான், முகமது பஷீர், ராஜன், ராஜேஷ் ரெத்தினமணி, மோகன், முகமது சாலி, வட்டச் செயலாளர் ராஜேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


# 48வது சென்னை புத்தகக் காட்சி

YMCA மைதானம், நந்தனம், சென்னை.

## முத்தமிழறிஞர் பதிப்பக வெளியீடுகள்



கழக இளைஞர் அணியின் X தள பக்கத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் சொல்லி

25%

கழிவு விலையில் புத்தகங்களைப் பெறலாம்.

அரங்கு எண் 390

முத்தமிழறிஞர் பதிப்பகம்